ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2164/64 - 2020 පෙබරවාරි මස 28 වැනි සිකුරාදා - 2020.02.28

2164/64 ஆம் இலக்கம் - 2020ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: DS/VN/L.ACQ/CHQ.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின்
குறிப்பு இல.: 4-3/8/2017/PC/265.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால், அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | |
|---|---|
| மாகாணம் | : வடக்கு |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை |
| கிராம அலுவலர் பிரிவு | : வறுத்தலைவிளான் (J/241) |
| கிராமம் | : வறுத்தலைவிளான் |
| ஆரம்ப வரைபட இல. | : பிபி யா 2951 |
| காணித்துண்டு இல. | : 01 |
| விஸ்தீரணம் | : 0.1970 ஹெக்டயார் |
| காணி எடுப்பதற்கான நோக்கம் | : புற்றுநோயாளர்களின் உறவினர்கள் தங்குவதற்கான தங்குமிட விடுதியினை நிர்மாணித்தல் |

01. துண்டு இல. 1;

காணியின் பெயர்: குடாவத்தையும் கரவையிட்டியும் தளம்பட்டையும் கரவையிட்டியும்; விபரம்: தோட்டக் காணியினுள் 2 நிரந்தரக் கட்டடங்களும் ஒரு கிணறும் நீர்த்தாங்கியும் மற்றும் ஒரு குழியும்; உரிமை கோருபவர்: அருந்ததி எட்வேட்பிள்ளை திருச்செல்வம்; விஸ்தீரணம்: 0.1970 ஹெக்டயார்.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ச. சிவஸ்ரீ,
பிரதேச செயலாளர்,
தெல்லிப்பளை.

பிரதேச செயலகம்,
தெல்லிப்பளை,
2020, பெப்புருவரி 25.

03 - 574

---

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 9/3/5/55

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2017/HA/580

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், யட்டவத்தை பிரதேச செயலாளர் பிரிவில், அஸ்கிரி பல்லேகம பற்று சிறு பிரிவில், தீவில்ல கிராம அலுவலர் பிரிவில், தீவில்ல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மா 1791 இல் 0.1144 ஹெக்டயார் விஸ்தீரணங் கொண்ட தீவில்ல வத்தை எனும் காணித்துண்டு.

**துண்டு இல. 1;**

காணியின் பெயர்: தீவில்ல வத்தை; விபரம்: புதிய கட்டடம் நிர்மானிப்பதற்கு ஒரு பகுதி காணியினை எடுத்துக் கொள்ளல்; உரிமை கோருவோர்: ரம்புக் பதன்கே மஹபேடி வீடு சோமாவதி, இல. 50, தீவில்ல குடியிருப்பு, யட்டவத்தை; விஸ்தீரணம்: 0.1144 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்து பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யடவத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீ. ஆர். கே. ஹென்னயாகே,
பிரதேச செயலாளர்,
யட்டவத்தை.

பிரதேச செயலகம்,
யட்டவத்தை,
2020, பெப்புருவரி 26.

03 - 575

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.